# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
### Sessions Case No.12/2026

**Deposition of Witness for Prosecution PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | டாக்டர் ராகேஷ்சர்மா | Father's Name | : | காத்தையன் |
| Village | : | சென்னை | Taluk | : | சென்னை |
| Calling | : | | Age | : | 32 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 23rd day of March 2026.**

**(A1 to A6 are present).**

**சாட்சியை காணொலி மூலமாக விசாரணை செய்ய வேண்டுமென்று அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க MP No.23, Dated 18.03.2026 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் சென்னை மாநகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிமன்ற முதன்மை நீதிபதிக்கு அனுப்பப்பட்ட இந்நீதிமன்ற கடித எண் 1777, நாள் 18.03.2026 ன்படி டாக்டர் ராகேஷ்சர்மா அவர்கள் காணொலி மூலமாக விசாரிக்கப்படுகிறார்.**

சென்னை மாநகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:45:08 +0530

திருமதி/செல்வி V. ருக்மணி Assistant Programmer என்பவர் Remote Point Co-ordinator ஆக இருக்கிறார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை ஸ்டாண்லி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதுநிலை மாணவராக பயின்று வருகிறேன். நான் நீடாமங்கலம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த போது 26.01.2019 அன்று இரவு 10.50 மணியளவில் நான் பணியிலிருந்த போது பாண்டியன், த/பெ. வசந்தகுமார் என்பவர் தன்னை தெரிந்த நபர்கள் தாக்கியதாக சிகிச்சைக்கு வந்தார். நான் முதலுதவி சிகிச்சை செய்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவருக்கு தலையில் 8x0.5x0.2 cm அளிவல் ஒரு கிழிந்த காயமும், 4x0.2 x0.1 cm அளவில் கிழிந்த காயமும் காணப்பட்டது. இடது தொடையில் 5x0.5x2 cm அளவில் கிழந்த காயம் காணப்பட்டது. இடது புஜத்தில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது. அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.5** ஆகும். மருத்துவ சிகிச்சைக்கு பின் அதன் கருத்துரையை பார்வையிட்டு நான் வழங்கிய காயச்சான்றிதழ் கருத்துரையுடன் கூடிய காயச்சான்றிதழ் **அசாஆ.6** ஆகும். மேற்படி தலையில் ஏற்பட்ட

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:45:16 +0530

காயங்கள் அருவாளால் ஏற்பட வாய்ப்புண்டு. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

பாண்டியன் சிகிச்சைக்கு அனுமதித்த போது மது போதையில் ஆட்கொண்டிருந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டருந்தது. அவருக்கு இடது பக்க தொடையில் வெட்டுக்காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரி. அவருக்கு இரத்த ஒழுகல்கள் இருந்ததா என்றால் இல்லை. அதனால் காயத்தின் வயதையோ, நிறத்தையோ நான் குறிப்பிடவில்லை என்றால் சரி. நான் பாண்டியனுக்கு முழுமையாக சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரி. மேல் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தேன். என்னை போலீசார் ஆயுதம் எதையும் காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரி. ஒருவர் தள்ளுமுள்ளில் கரடு முரடான பகுதியில் இடறி விழும் போது இதுபோன்ற காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு எதிரிகள் மற்றும் அவர்களது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் காணொலி வாயிலாக படித்து காட்டப்பட்டு விளக்கி கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு மின் அஞ்சல் மூலம் சாட்சியம் அனுப்பி வைக்கப்பட்டு சாட்சியின் கையொப்பம் பெறப்பட்டது.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.24 10:45:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.